

# வைத்தியக் காப்புறுதிப் பூட்கை – நீங்கள் தெரிந்திருக்க வேண்டியவை எவை?

## 1. வைத்தியக் காப்புறுதி என்றால் என்ன?

'வைத்தியக் காப்புறுதி'இ உங்கள் வைத்திய காப்புறுதி மூலம் குறிப்பிடக்கூடியளவு உங்கள் மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு வைத்தியக் காப்புறுதிப் பூட்கையானது, ஏனைய காப்புறுதிக் கொள்கைகளைப் போல், ஒரு காப்புறுதியாளருக்கும் மற்றும் ஒரு தனிப்பட்டவருக்கும்.'குழுவுக்கும் இடையிலான ஒப்பந்தமாகும். இந்தப் பூட்கையில், காப்புறுதிப் பூட்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, அந்த குறிப்பிட்ட 'தவணைக் கட்டணத்திற்கு' ஏற்ப செலவுகளை இழப்பீடு செய்வதற்கு காப்புறுதியாளர் உடன்படுவார். பொதுவாக, வைத்தியக் காப்புறுதிப் பூட்கை, அதாவது வருடத்திற்கான பூட்கை ஒரு வருடத்தைக் காப்பீடு செய்யும்.

## 2. ஏன் வைத்தியக் காப்புறுதி முக்கியமானது?

ஒரு வைத்தியக் காப்புறுதியானது, வீட்டுக்கான சேமிப்பில் தாக்கத்தை உருவாக்கும் அல்லது கடனாளியாக்கும், திடீரென அல்லது எதிர்பாராது ஏற்படும் வைத்தியசாலையில் அனுமதித்து பெறப்படும் சிகிச்சைகளுக்கான செலவுகள் அல்லது தீவிரமான நோய், தனிப்பட்ட விபத்துகள் போன்றவற்றுக்கான ஏனைய மருத்துவ சேவைகளினால் எழும் செலவுகளில் இருநது உங்களைப் பாதுகாக்கின்றது. அத்துடன், நீங்கள் பெற்றுக்கொண்ட வைத்தியக் காப்புறுதி பூட்கைக்கு அமைவாக, நீங்கள் வழமையான மற்றும் முற்காப்பு மருத்துவ சேவைகளையும் பெற்றுக்கொள்ளும்.

## 3. எந்த வகையிலான வைத்தியக் காப்புறுதி வகைகள் கிடைக்கப்பெறுகின்றது?

வைத்தியசாலையில் தங்கியிருந்து பெறப்படும் சிகிச்சைகளின் போது ஏற்படும் செலவுகளை மீளளிப்பு செய்யும் வைத்தியக் காப்புறுதி வகை இலங்கையில் பரவலாக காணப்படுகின்றது. காப்புறுதியைப் பெறுபவரின் தேவைக்கு அமைவாக தேர்ந்தெடுக்கக்கூடிய வகையில் பல்வேறுபட்ட வைத்தியக் காப்புறுதி வகைகளும் கிடைக்கப்பெறுகின்றது. காப்புறுதிக் கம்பனிகள் வழமையாக, சுகயீனம்.'காயம் தொடர்பான செலவை வைத்தியசாலைக்கு நேரடியாக கொடுப்பனவு செய்யும் அல்லது மீளளிப்பு செய்யும். வைத்தியக் காப்புறுதிகள் தனியான பூட்கைகளாக அல்லது ஆயுட் காப்புறுதி பூட்கையின் துணையிணைப்பாக.'. மேலிணைப்பாக வழங்கப்படும்.

## 4. எவ்வாறு உங்கள் தேவைக்கு பொருத்தமான வைத்தியக் காப்புறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பது?

உங்களுக்கு தேவையான காப்பீடு எது மற்றும் உங்களுக்கு தேவையில்லாதவற்றுக்கு கொடுப்பனவு செய்வதைத் தவிர்ப்பதற்கு, உங்களுக்கு பொருத்தமான காப்புறுதி வகையைத் தேர்ந்தெடுப்பதற்கு சந்தையில் கிடைக்கும் வகைகளைக் கவனமாக கருத்தில்கொள்ள வேண்டும்.

## 5. உங்களுக்கு முன்னராகவே நோய் இருந்தால் என்ன நடக்கும்?

வைத்தியக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மருத்துவ நிலை.'நோய் (நீரழிவு, இதயநோய் அல்லது புற்றுநோய்) இருத்தல். இது முக்கியமானது, காரணம் முன்நோய் நிபந்தனைகளை காப்புறுதிக் கம்பனிகள் காப்பீடு செய்வதில்லை, புதிய பூட்கைக்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு, அதாவது கொடுப்பனவுக்கு, பூட்கையின் வகை மற்றும் பூட்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக பூட்கை ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட காலம் (காத்திருத்தல் காலம்) பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் முன்நோய் நிபந்தனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

## 6. வைத்தியக் காப்புறுதி தவணைக் கட்டணத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை?

வயதான நபருக்கான தவணைக் கட்டணம் வயது குறைந்த நபரொருவரின் தவணைக் கட்டணத்தை விட அதிகமாக இருக்கும் காரணம் வயதான நபர் வயது குறைந்த நபரை விட நோய்படும் சாத்தியக்கூறுகள் அதிகம் ஆகும். அதனால், தவணைக் கட்டணத்தை தீர்மானிப்பதில் வயது மிகப்பெரிய காரணியாக இருக்கின்றது. அத்துடன் உங்களுடைய மற்றும் உங்கள் குடும்பத்தின் மருத்துவ வரலாறு என்பன தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கும் மற்றுமொரு பிரதான காரணியாக இருக்கின்றது. மருத்துவ வரலாற்றில் நோய்கள் இல்லாது விடில் தவணைக் கட்டணங்கள் குறைவாக இருக்கும். தவணைக் கட்டணத்தை குறிப்பிட்ட வீதத்தில் குறைப்பதை போல் நன்மையளிக்கும் காப்புறுதிக் கம்பனிகளினால் தீர்மானிக்கப்படும் 'கோரிக்கைக் கால' வருடங்கள் என்பனவும் புதுப்பித்தல் தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கும் காரணிகளாக அமையும்.

## 7. உங்கள் வைத்திய காப்புறுதிப் பூட்கை பற்றி நீங்கள் விளங்கிக்கொண்டுள்ளீர்களா?

நீங்கள் குறிப்பிட்ட வைத்திய காப்புறுதிக்கு சேர்வதற்கு முன்னர், பூட்கை ஆவணத்தை விளங்கி அதனைப் புரிந்துகொள்வதற்கு முயலுங்கள். இதற்கு நீங்கள் மாதிரி பூட்கை ஆவணத்தைக் கோருவதற்கு முடியும். வைத்தியக் காப்புறுதிப் பூட்கை அதனால் காப்பீடுசெய்யப்படும் அனைத்து நன்மைகள் தொடர்பாகவும் பட்டியலொன்றைக் கொண்டிருப்பதுடன், எந்த வகை நோய்கள்.'சேவைகளுக்கு காப்பீடு வழங்கப்படமாட்டாது மற்றும் வரையறைகள் என்பவற்றைக் கூறுவதுடன், கோருக்கைக்குரிய நிகழ்வைப் பூர்த்திசெய்வதற்குரிய தேவைகளையும் தெரிவிக்கும்.

இலங்கை காப்புறுதிச் சபை, காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான ஓர் அமைப்பாகும். காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாத்தல் இலங்கை காப்புறுதிச் சபையின் நோக்கமாகும்.


**சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்**

பாடல் பகுதி
இலங்கை காப்புறுதிச் சபை
11 வது தளம், கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01.
தொலைபேசி: 011 2396184-9
பக்ஸ்: 011 2396190
மின்னஞ்சல்: info@ibsl.gov.lk
இணையத்தளம்: www.ibsl.gov.lk